★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 27உ புதன் (9—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 28உ வியாழன் (10—5—56) [இதழ் 2

19 கோடி வாக்காளர்க

புதுடில்லி, மே 8—

இந்தியாவில் இப்போது ஏறத்தாழ 19 கோடி வாக்கா
உள்ளனராம்.

கடந்த பொதுத் தேர்தலின்போது 15,81,80,000 இருந்த வாக்காளர் எண்ணிக்கை 1955-ம் ஆண்டு இ புனர் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு 18,93,40,000 ஆக உ தள்ளது என்று மக்கள் சபையில் தாக்கலாகியுள்ள வாக்கா பட்டியலிலிருந்து தெரியவருகிறது.

'கிழவிகளைக் கேட்டு சமூக சீர்திருத்தம் செய்யுங்கள்'

'நாகரீகக் கடைவீதியில் அலையும் 'பட்டுப்பூச்சிகள்' கருத்தறிதல் மட்டும் போதாது'

இந்தி-இந்து வெறியர் தாண்டனின் பழைமை போதை

"குடும்ப நில உடைமையில் பெண்களுக்கும் பங்கு அளிப்பதின் காரணமாக, இந்து குடும்பம் சிதறிவிட ஏதுவாகும்.

"தந்தையின் சொத்தில் சமபாகம் பெண்களுக்கும் தரும் ஏற்பாட்டின் விளைவாகக் காங்கிரஸ் சுக்குநூருகி விடுவது நிச்சயம்.

"இந்த ஏற்பாட்டை உருவாக்கினவர்கள், மேல்நாட்டு கருத்திலும், சிந்தனுமுறையிலும் மூழ்கிக் கிடக்கிருர்கள். இவ்வேற்பாடு, நமது பூர்விகக் கலாச்சாரம், பாரம்பரியம், பழக்க வழக்கம் அனைத்துக்கும் எதிர்மறையானதாகும். இது, நமது குடும்ப வாழ்க்கையைச் சீர்குலைத்துவிடும்.

"இந்த ஏற்பாட்டைக் கொண்டுவருவதின் மூலம், அரசாங்கம் நமது பூர்வப் பாரம்பரியத்தைக் கிண்டல் செய்ய முயற்சிக்கிறது. தந்தையின் சொத்தில் மகளிருக்கும் சம பங்கு தர வேண்டுமா என்பதை, கன்னுட் கடைவீதிகளில் அலைந்து திரியும் பட்டுப் பூச்சி (படித்த பெண்கள்)களைக் கேட்டு அறிவதற்குப் பதிலாக, இந்து குடும்பத்தில் உள்ள கிழவிகளைக் கேட்டு செயல்பட அரசாங்கம் முன்வர வேண்டும். கண்டிப்பாக, அக்கிழங்கள் இப்போக்கை எதிர்த்தே தீருவார்கள்."

—இவ்வாறு, இந்தி வெறியரும், இந்து மத வைதீக வெறியருமான புருஷோத்தம தாஸ் தாண்டன், இந்து வாரிசு உரிமை மசோதாவை எதிர்த்து, மக்கள் சபையில் ஊளையிட்டார்.

புதுடில்லி கன்னுட் கடைவீதிகளில் காணப்பெறும் படித்தப் பெண்களைக் குறித்து மாசுகற்பிக்கும் வகையில் தாண்டன் குறிப்பிட்டதை ஆவேசமாக எதிர்த்துப் பேசினர், பம்பாயைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினரான எஸ் எஸ். மூர் என்பார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தாண்டன் கூறியது போல், சட்டசபைகளில் சமுதாய சீர்திருத்தச் சட்டங்கள் விவாதிக்கப்பட்ட காலங்களில் எல்லாம், கிழவிகளைக் கேட்டு முடிவுகட்டுங்கள் என்ற கூக்குரல் கிளப்பப்பட்டே இருக்கிறது. உடன்கட்டை ஏறுவதைத் தடுக்க சட்டமியற்ற பிரிட்டிஷ் ஆட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

தாதியர்களுக்கு ஓய்வு விடுதி

அவசியம் உணர்ந்து ஐதராபாத் சர்க்கார் நடவடிக்கை

ஐதராபாத், மே 8—

மருத்துவமனைகளில் கடினமாக உழைக்கும் தாதியர்கள், மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள், மருத்துவச்சிகள் ஆகியோருக்கு வேலை நேரத்திற்குப் பிறகு ஓய்வு பெறவும், பொழுதுபோக்கவுமான ஏற்பாடுகள் செய்யவேண்டியது எத்தனை அவசியம் என்பதை, இந்தியாவிலேயே முதன்முதலாக ஐதராபாத் மாநிலம்தான் உணர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மீர் ஆலம்குளம் அருகே, ஐதராபாத் சர்க்கார் இந்தத் தாதிகளுக்காக ஒரு ஓய்வு விடுதியை அமைத்துத் தர திட்டமிட்டிருக்கிருர்களாம்.

'மருத்துவ மனைகளில் நோய்களைக் குணப்படுத்துவதும், நோய் வராமல் தடுப்பதுமான முக்கியமான—மிகுந்த கஷ்டமான பணிகளை மேற்கொளளும் தாதிகள் வேலை நேரத்திற்குப் பிறகு அமைதியான—சந்தோஷமான சூழ்நிலைகளில் ஓய்வு பெறவும், பொழுதுபோக்கவும ஏற்பாடுசெய்ய வேண்டியது மிக அவசியம்' என்று, இந்தத் திட்டம் குறித்து ஐதராபாத் சர்க்காரின் குறிப்பு கூறுகிறது.

திருச்சி மாநாட்டு வேலைகள்

(தில்லை-வில்லாளன்—நமது விசேட நிருபர்)

திருச்சி, மே 8—

திருச்சி மாநாட்டு வேலைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

திராவிடத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் முக்கிய தோழர்கள் திருச்சி வந்து மாநாட்டுப் பணிகளிலே ஈடுபட்டுள்ளனர்.

ஈரோட்டிலிருந்து இன்று தோழர் ஈ. வெ கி. சம்பத், கரூர் சோமு அவர்களுடன் வந்து தங்கியுள்ளார்.

தோழர் கண்ணதாசன் இங்கு வந்து, மாநாட்டு காரியங்களைப் பற்றிப் பேசிவிட்டுத் திரும்பினர். அலங்காரத்திற்குரிய முகப்பு சாமான்கள் சிலவற்றை கொண்டுவர காரைக்குடி சென்றுள்ளார்.

நகரசபை உறுப்பினர் நாகசுந்தரம் நாளெல்லாம், மாநாட்டிற்கு நகராண்மைக் கழகத்தாரால் செய்யக்கூடிய உதவிகளையெல்லாம் கேட்டுப் பெற்றுத் தந்துள்ளார்.

மாயவரம் கருணாநந்தம், காந்தி, டி. கே. சீனுவாசன், இளமுருகு — பொற்செல்வி ஆகியோரும் மாநாட்டு வேலைகளில் பங்கு பெற்றுள்ளனர்.

முகப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சென்னையிலிருந்து தோழர் அரங்கநாதன், முகப்பை நல்ல முறையில் அமைக்க அரும்பாடுபடுகிருர். தோழர் செல்லையா அவர்கள் நாளை மறுதினம் வரக்கூடும். கே. எம். கண்ணபிரான் கண்காணித்து வருகிருர்.

முகப்பு, ஒரு பெரிய கோட்டை வாயில்போல் அமைந்துள்ளது. அதற்கு அடுத்து, மாயவரம் தோழர்களால் கீற்றினலேயே அமைக்கப்படும் எழில் மண்டபம் நம்மை வரவேற்கும்.

அந்த வாயிலுக்குப் பிறகு விலங்கொடித்த வீரன் நிற்கும் ஒரு கோட்டைச் சுவர்—அதன் இரு பக்கங்களில் சிங்கங்கள் இரண்டு கோட்டைக் காவல் புரிகின்றன.

வெளிவாயில் மண்டபங்களின் இருபுறங்களிலும் புத்தர் மண்டபம், வள்ளுவர் மண்டபம் என இரண்டு மண்டபங்கள் அமைக்கிருர்கள்.

புத்தரின் அழகோவியம், ஒரு எழில் மண்டபத்தில் இருப்பது பார்க்கப் பரவசமாக இருக்கிறது.

வள்ளுவரின் ஓவியம் ஒரு உத்தாணி மண்டபத்தின் நடுவில் வைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் நகரம் என்று அதனைப் பார்த்தவுடன் நம்மை அறியாமலேயே கூறச் சொல்கிறது அம்மண்டபம்!

மேடையில் நான்கு பெருந் தூண் 'பார்!' நிறுத்தப்பட்டுள்ளன. மேலே அலங்காரத் தனி வளைவுடன் அழகை அள்ளி அள்ளித் தெளிக்கின்றன.

பேச்சாளர் பேசும் தனி மன்றமே அமைக்கப்பட்டுள்ளது, மேடைக்கு முன்பு!

ஓவியக் காட்சிகளான படங்கள் தினந் தினம் வளர்கின்றன.

மாநாட்டு வேலைகள் புயல் வேகத்தில் நடைபெறுகின்றன.

மாநாட்டில் கலந்துகொள்வோர் இன்றே தங்களது பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவேண்டும். இரயில் வசதிகள் ஏராளம் கிடைக்கும். நேற்று தென்னிந்திய ரயில்வே போக்குவரத்து அதிகாரி, வரவேற்புக்குழுச் செயலாளரை அழைத்து தனி வண்டிகள் விடுவது பற்றிப் பேசியுள்ளார்.

மாநாட்டுப் பந்தலையொட்டி ராசி குழுவினரால், அழகிரி பந்தலில் உணவு விடுதி அமைக்கப்படுகிறது. மாநாட்டுக்கு வருவோருக்கு அருமையான உணவு படைக்கவேண்டும் என்று நல்ல ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள், உணவு விடுதியார்.

நான்கு நாட்களுக்கும் சேர்த்து (காலை சிற்றுண்டி, இருவேளை சாப்பாடு) ரூபாய் ஐந்தும், ஒரு நாளைக்குக் காலை சிற்றுண்டி, இருவேளை சாப்பாட்டுக்கு ரூ. 1—6—0-ம் கட்டணமாகும்.

திருச்சி வள்ளுவர் நகரிலுள்ள தற்காலிக தலைமை நிலையத்தில் பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோர் சட்ட திட்ட திருத்த வேலையை முடித்துவிட்டனர். அச்சிட்ட நகல், விரைவில், பொதுக்குழு உறுப்பினர்களுக்கு கிடைக்கும். அண்ணு அவர்கள், தோழர்கள் கே. ஏ. மதியழகன், பொளூர் சுப்பிரமணியம், சி. வி. இராசகோபால் ஆகியோர் உடனிருக்க எல்லா வேலைகளையும் துரிதமாக நடைபெற ஊக்குவித்து வருகிருர்.

நிலச் சீர்திருத்தம்: ஆந்திர மந்திரிகளிடை தகராறு

அவசரம் கூடாதென்கிருர் ஒருவர்; தாமதமாகி விட்டது என்கிருர் மற்ருருவர்

கர்னூல், மே 9—

நிலச்சீர்திருத்தம் குறித்து ஆந்திர மந்திரிகளிடையே தகராறு கிளம்பி யுள்ளதாகத் தெரிய வருகிறது.

மாநில சட்டசபையின் அடுத்த கூட்டத்திலேயே, நிலச்சீர்திருத்தத்திற்கான மசோதாவை நிபுணர் குழுவின் சிபாரிசுகளையும் கணக்கில எடுத்துக் கொண்டு தயாரித்து தாக்கல் செய்துவிட வேண்டும் என்றுகோரும் தீர்மானம் ஒன்று, ஆந்திர பிரதேச காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கு, துணை முதன் மந்திரியான சஞ்சீவிரெட்டி ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்திருக்கிருர்.

ஆனல் ரெவினியூ மந்திரியான சந்திரமௌலி, ஆந்திர காங்கிரஸ் இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வருவது தனக்கு ஆச்சரியமளிப்பதாகக் கூறியிருக்கிருர்.

அதுமட்டுமின்றி, ஆந்திர பிரதேச காங்கிரஸ் தலைவரான சத்தியநாராயண ராஜுவும், நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருவதில் சர்க்கார் காட்டும் தாமதம் குறித்துக் கண்டனம் தெரிவித்திருப்பதும் தனக்கு ஆச்சரியமளிப்பதாக சந்திரமௌலி கருத்தறிவித்திருக்கிருர்.

"ஆந்திர காங்கிரசைப் போன்ற பொறுப்பான ஒரு நிறுவனம், நில விவகாரப் பொறுப்பிலிருக்கும் நான் உட்பட இதர மந்திரிகளையும், சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்களையும் கூடக் கலந்தாலோசிக்காது இப்படி ஒரு தீர்மானத்தை அவசர அவசரமாகக் கொண்டு வருவதை என்னல் புரிந்துகொள்ள இயலவில்லை.

"வேறெவரையும் போல நானும் நிலச் சீர்திருத்தம் வேண்டும் என்பதில் ஆவல் கொண்டவன் தான் : ஆனல், அதற்காக எவ்வித அவசர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

"நிலச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை, கடந்த அக்டோபர் திங்களில் கிடைத்தது : முதலில் அதை முழுவதும் பரிசீலனை செய்தாக வேண்டும் ; அதற்குப் பின்புதான், சட்டமியற்றுவது பற்றி யோசிக்க வேண்டும்,"

என்றும் அந்த மந்திரி, பேட்டி ஒன்றின்போது கருத்தறிவித்திருக்கிருர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழக, மத்திய செயற் குழுக் கூட்டம், (Working Committee) திருச்சி 'வள்ளுவர் நகரி'லுள்ள, தற்காலிகத் தலைமை நிலையத்தில், 16-5-56 புதன் காலை 8-30 மணிமுதல் 9-30 மணிவரை நடைபெறும்.

—தலைமைக் கழகம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

எற்றுக்கோ இப்பெரிய மனிதப் பட்டம்?

நம் நாடு
...னை 9—5—'56 செவ்வாய்

...ரடித்து அழுவதை நிறுத்துக!

...வொரு மாகாணத்திலும் ...ாங்கிரஸ் கட்சிக்குள்ளாக கோஷ்டி பூசல் இடம் பெற்றிருப்பது போலவே, இந்த மாகாணக் காங்கிரசிலும் அப்பூசல் இடம் பெற்று இருக்கிறது. இக்கோஷ்டி பூசல் காங்கிரஸ் கட்சியின் உடன்பிறந்தத் தொழு நோயாகப் போய்விட்டது.

காங்கிரஸ் கட்சிக்குள்ளாக கோஷ்டிகளை உருவாக்கி, அவைகளை ஒன்றோடு ஒன்று மோதவிட்டுக் கொண்டு இருப்பதின் மூலம், தம்தம் தலைமையைக் காப்பாற்றிக் கொள்ளும் வித்தையில் கைதேர்ந்தவர்களாக இன்று இருந்து வருபவர்கள் காங்கிரஸ் தலைவர்களேயாவர். நாம் அறிந்த வரையில், கோஷ்டி பிரிக்கும் வித்தையில் சிறந்து விளங்குபவர் கனம் காமராசர் அவர்களாவர்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைமை தம்மிடமிருந்துக் கைநழுவிச் சென்று விடாமல் நீண்டகாலமாகக் காப்பாற்றி வந்திருப்பதற்குக் காரணமாக எதையாவது கூறவேண்டுமானால், கட்சிக்குள்ளாக கோஷ்டிப் பிரித்து மோதவிடுவதில் கனம் காமராசர் அவர்களுக்கு இயல்பாக உள்ள, அலாதித் திறமையைத்தான் குறிப்பிட வேண்டும். அவருடைய கடந்த கால பொதுவாழ்வையும், அவர் வாழ்க்கை வரலாறு எனத் தரப்பட்டுள்ள தமிழ் ஏட்டையும் ஆராய்ந்து பார்ப்பவர்கள், மேற்குறிப்பிட்டுள்ள முடிவிற்கு வருவதைத்தவிர்த்து வேறு வழி இல்லை.

காங்கிரஸ் கண்ணோட்டத்திலிருந்து பார்க்குமிடத்து, இந்தக் கோஷ்டிப் பிரிவினையின் காரணமாகத்தான், காங்கிரஸ் முதலமைச்சராக இருந்த இராஜகோபாலாச்சாரியார் அவர்களும், காமராசர் அவர்களால், விரட்டப்பட்டிருக்கிறார் என்பது தெரியவரும்.

அதே கோஷ்டிப் பிரிவினைதான், காமராசர் அவர்களையும் கனமாக்கிற்று என்ற உண்மையையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளாக நடைபெறும் 'இருட்டறை' கோஷ்டிபிரிக்கும் விவகாரத்தையும், அதன் திருவிளையாட்டையும், அதன்விளைவுகளையும், துவக்கக்கட்டத்தில் முன்கூட்டியே சாதாரண மக்களால் விளக்கமாகத் தெரிந்துகொள்ள முடியாது. சம்பவங்கள் நடந்துவிட்ட பிறகுதான், அச்சம்பவங்களின் உள்ளடக்கங்களை, உள்ளதுஉள்ளபடியே அறிந்துகொள்ளுவது எவருக்கும் சாத்தியமாகும்.

கோஷ்டிப் பிரிவினை காரணமாக இருந்துவந்த உட்பகையை, தமது இயல்புப்படி தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஆச்சாரியாரை அதிகாரத்திலிருந்து விரட்ட தருணத்தை எதிர்பார்த்திருந்தார் காமராசர் அவர்கள். ஆச்சாரியாரின் ஆணவக் கல்வித் திட்டத் திணிப்பும், அதற்குத் தமிழ் மக்களிடை மூண்டெழுந்தப் பெரும் எதிர்ப்பும், ஆச்சாரியாரை விரட்ட காமராசர் திட்டமிட்டிருந்ததற்கு அரியதோர் வாய்ப்பாக அமைந்துவிட்டது.

தாம் நினைத்ததை முடிக்கும் வெறும் வாய்ப்பாக அமைவதுடன் மட்டுமே, கல்வித் திட்டத் திணிப்பும் - எதிர்ப்பும் இருக்கவில்லை. ஆச்சாரியாரை விரட்டி அடிப்பதற்கும், தமிழ் மக்களின் நல்லாதரவைப் பெறுவதற்கும் ஏற்றதோர் கருவூலமாகவும், அது காமராசர் அவர்களுக்குப் பயன்பட்டது.

எந்தக் கோஷ்டிப் பிரிவினையை உயிரூட்டி வளர்த்து வந்ததின் காரணமாகத் தமது பொது வாழ்வு சிறப்பெய்துவது கண்டு மனமகிழ்ந்திருந்தாரோ, அதே கோஷ்டிப் பிரிவினை, கனம் காமராசர் அவர்களை விழுங்கி ஏப்பம்விட இப்பொழுது தீவிரமாக முயன்று வருகிறது. அதன் திருவிளையாடல் பட்டப்பகல் வெட்ட வெளிபோல் தெரியவும் தொடங்கி இருக்கிறது.

கோஷ்டிப் பிரிவினையின் காரணமாக உருவான சொந்தப் பகையை முடித்துக் கொள்ள, ஆச்சாரியாரை எதிர்த்து விரட்ட, புதிய கல்வித் திட்டம் சிறந்த கருவூலமாகக் காமராசர் அவர்களுக்குக் கிடைத்தது போன்றே, தட்சிணப் பிரதேசம் அமைப்புக் கருத்து, காங்கிரஸ் கட்சிக்குள்ளாக இருந்துவரும் காமராசர் எதிர்ப்பு கும்பலுக்குக் கிடைத்திருக்கிறது. காமராசர் அவர்களை அழிக்கக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் இடந்தேடிகள் அனைவரும், தட்சிணப் பிரதேச ஆதரவாளர்களாக பேயாட்டம் போடத் தொடங்கி இருக்கின்றனர்.

காமராசர் அவர்களுக்கு எதிராகக், காங்கிரஸ் கட்சிக்குள்ளாக ஏற்பட்டுவரும் எதிர்ப்பில், அவருடைய அரசியல் வாழ்வு கருகிப் போனாலும் ஒன்றுதான்; அல்லது எதிர்ப்பாளர்கள் மூக்கறுந்து போனாலும் நமக்கு ஒன்றுதான். எனவே, காங்கிரஸ் கட்சிக்குள்ளாக நடைபெற்றுவரும் இந்தப் பதவிப் போராட்டத்தில் வெற்றி பெறுகிறவர்களைக் குறித்தோ அல்லது தோற்கிறவர்களைக் குறித்தோ நமக்குத் துளியும் கவலை இல்லை.

காமராசர் அவர்களை எப்படியும் சீரழித்துவிடுவது என்ற ஒரே நினைப்புடன் காங்கிரஸ் கோஷ்டி எதிர்ப்பு செயல்படுமானால், அதன் விளைவாகத் தமிழ் மக்களுக்குப் பெரியதோர் தீமை எதுவும் நேர்ந்துவிடப் போவது கிடையாது. ஆனால், காங்கிரசுக்குள்ளாக நடைபெறும் உள்ளடிக் குழப்பத்தின் காரணமாக, தட்சிணப் பிரதேச அமைப்புத் திணிப்பு நிச்சயிக்கப்படுவதானால், அதைப் பார்த்துக்கொண்டு தமிழ்மக்கள் வாளாயிருக்க முடியாது.

தட்சிணப் பிரதேசக் கருத்தைத் தமிழ் நாட்டு மக்கள், பிப்ரவரி இருபதில் தாங்கள் மேற்கொண்ட பொதுவேலை நிறுத்தத்தின் மூலம், ஏற்கமுடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் தந்த அத்தீர்ப்பை மதித்து, தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை காங்கிரஸ் கட்சியில் உள்ள கோஷ்டியினர் அனைவரும் கைவிட்டுவிட வேண்டும். அவ்வாறு செய்ய முன்வருவதுதான், மக்களாட்சி முறையில், காமராசர் எதிர்ப்பு கோஷ்டியினரான காங்கிரஸ் கட்சியினருக்கு உள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக இருக்கும். அதை விடுத்து, காமராசரை எதிர்க்கிறோம என்று பாசாங்கு செய்து கொண்டு, காங்கிரஸ் கட்சியில் ஆதிக்கம் பெற முயலுவதும், அதே நேரத்தில் தமிழ் மக்கள் மீது, அவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட, தட்சிணப் பிரதேசத் திணிப்புக்கு வழிவகை செய்வதும் என்றால், தமிழர் துரோகியான காமராசர் அவர்களுடன், இந்தக் காங்கிரஸ் தட்சிணப் பிரதேச வௌவால்களையும் தமிழர் துரோகிகளெனச் சேர்த்து அனைவரையும் பொதுவாழ்விலிருந்து விரட்ட வேண்டியதுதான். தமிழ் மக்களின் முன்னுள்ள அரசியல் பணி இதுவேயாகும்.

வங்காள-பீகார் இணைப்பை முன்மாதிரியாகக் கொண்டுதான், இந்தத் தட்சிணப் பிரதேச அமைப்புப் பேச்சுக்குப் புத்துயிர் தரப்பட்டது. ஆனால், முன்மாதிரியே பிடிசாம்பலாகப் போய்விட்ட பிறகு, வெறும் யோசனை அளவில் அமிர்தசரஸ் தீர்மானத்தில் எழுத்தளவில் இருக்கும் இருமொழி—பன்மொழி அமைப்பைத் தட்சிணப் பிரதேசம் எனக் கற்பனை செய்து கூறி அதற்காக மாரடித்து அழுவது சிறந்த அரசியலாகாது. அவ்வாறு மாரடித்து அழுவதை நிறுத்திக்கொண்டு, கனம் காமராசர் அவர்களிடமிருந்து காங்கிரஸ் ஆதிக்கத்தைக் கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபடும்படி அதற்காக மெய்வருந்த முயற்சித்துவரும் காங்கிரஸ் கும்பலை வேண்டிக் கொள்ளுகிறோம். அப்பொழுதுதான் காங்கிரஸ் கட்சிக்குள்ளாக மலர்ந்து வளர்ந்துவரும் 'ஜனநாயக உணர்வு' தமிழ் மக்களுக்கு விளக்கமாகத் தெரியும்.

இரண்டாம் திட்டத்தில் ஆந்திராவின் பங்கு

மந்திரிகள் முறையிட்டிற்குப்பின் அதிகமாகிறது

கர்னூல், மே 7—

அண்மையில் நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில், ஆந்திரா மந்திரிகள், இரண்டாம் திட்டத்தில் தங்கள் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவானது என்று முறையிட்டதின் விளைவாக, ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 118.43 கோடி, இப்போது ரூ. 146 கோடி அளவாக உயர்த்தப்படும் என்று தெரியவருகிறது.

அதிகமாக ஒதுக்கப்படும்தொகை சமூக நலம், தேசீய அபிவிருத்தித் திட்ட வேலைகள், சமுதாய நலத் திட்டங்கள் இவற்றிற்காக ஒதுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

மேலும், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையும் இப்போது அதிகரிக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

தீண்டாமை ஒழிந்து வருகிறதா?

இல்லையென்கிறார் மந்திரி ஜெகஜீவன்ராம்

சாதி இந்துக்கள் மனமாற்றம் பெறவேண்டுமென எச்சரிக்கை

பாலங்கோடு, மே 7—

'தீண்டாமை வேகமாக ஒழிந்து வருவதாகப் பலர் நம்புகிறார்கள்; ஆனாலும், அது ஒழியவில்லை. சட்டமியற்றிய பின்னும் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது அரசியல் சட்டவிரோதமானது' என்று தெரிவித்தும் கூட, தீண்டாமைப் பேய் உலவத்தான் செய்கிறது; அந்தத் தீமை நிலவத்தான் செய்கிறது"

என்று, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெ. ஜீவன்ராம், இங்கு தாழ்த்தப்பட்டோா மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தீண்டாமை ஒழிந்து வருகிறதா என்பதைச் சோதிக்க, சாதி இந்துக்களின் கிணறுகளிலிருந்து தாழ்த்தப்பட்டோர் நீர் இறைக்க சுதந்திரம் பெற்றுவிட்டார்களா என்று பார்த்தால் போதும்!

"இந்தியா முழுமையிலும் சுமார் ஒரு டஜன் கிராமங்களில் மட்டுமே இந்தச் சுதந்திரம் நிலவுகிறது என்பது, எப்படி தீண்டாமை ஒழிந்து வருகிறது என்பதாக நம்புவதற்குத் துணை புரியும்?"

என்றும், ஜெகஜீவன் ராம், இடித்துரைத்திருக்கிறார்.

தீண்டாமை அகல, சாதி இந்துக்கள் மனமாற்றம் பெற்றாக வேண்டும் என்றும், சமுதாயத்தில் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதி கண்டு, அளவுக்கு மீறி தாழ்த்தப்பட்டோர் பொறுமை காட்டிவிட்டனர் என்றும், இனியும் தொடர்ந்து அநீதி இழைக்கப்படுமானால் அவர்கள்; ஆதரவற்ற சோக நிலையில் எதையும் செய்யத் துணிந்துவிடுவார்கள் என்றும் ஜெகஜீவன் எச்சரிக்கை தந்திருக்கிறார்.

'சுயநலமின்றி நிதி தரமாட்டார்கள்'

முதலாளிகள் பற்றி காங்கிரஸ் செயலாளர்

நைனிடால், மே 7—

'எந்த ஒரு முதலாளியும் சுயநலமின்றி காங்கிரஸ் நிதிக்கோ, வேறு நிறுவனங்களுக்கோ நிதி தர மாட்டார்கள்; அப்படி அவர்களிடமிருந்து பணம் வாங்கினால், நிறுவனங்களுக்குள் சுயநலமிகள் நுழைந்து விடுவார்கள். இம்முறையில் நிதி திரட்டுவதைவிட பொதுமக்களிடை காங்கிரசார் வேலைசெய்தால், அவர்கள் மனத்திருப்தியுடன் தாங்களாகவே உதவுவார்கள்"

என்று, அனைத்திந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமத் நாரயண் காங்கிரஸ் ஊழியா கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சோஷலிச பாணி சமுதாய அமைப்பை கருத்தில் கொண்டு காங்கிரஸ்காரர்கள் ஏழை மக்களுக்காக சலியாமல் உழைத்து காங்கிரசை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்.

இந்து கோயில் பணத்தை ஆங்கில போதனைக்குப் பயன்படுத்தக் கூடாதாம்!

ஆந்திர அரசாங்கத்தின் புதிய உத்தரவு

கர்நூல், மே 6—

ஆங்கிலத்தைப் போதனை மொழியாகக் கொண்டு நடத்தப்பட்டு வரும் கல்வி நிலையங்களுக்கு, இந்து கோயில்களில் உபரியாக இருக்கும் பணத்திலிருந்து உதவி அளிக்கக்கூடாது என்ற புதிய உத்தரவு ஒன்றை ஆந்திர அரசாங்கம் பிறப்பித்து இருக்கிறது.

ஆனால், அத்தகு மிகுதித் தொகையிலிருந்து, வடமொழி போன்ற இந்திய மொழிகளின் போதனைக்கும், இந்த மத கலாச்சார பயிற்சிக்கும், சிற்பக் கலைப் பயிற்சிக்கும் உதவலாம என்றும அவ்வுத்தரவில் குறிப்பிட்டிருக்கிறது.

பாரிசில் டிட்டோ!

யூகோஸ்லாவியா குடியரசுத் தலைவரான மார்ஷல் டிட்டோ பிரான்ஸ் நாட்டுத் தலைநகரான பாரிசிற்கு வந்துள்ளார்.

ஏராளமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அவரை இரயில் நிலையத்தில், பிரெஞ்சுக் குடியரசுத் தலைவா ரனேகோட்டி, பிரதமர் கய்மாலெட், மற்றும் இதர மந்திரிகள் ஆகியோர் வரவேற்றிருக்கின்றனர்.

உணவுப்பொருள் விலை இறங்கி வருகிறதாம்!

தென்னாட்டு நிலைக் குறித்து மத்திய மந்திரி

தென்னாட்டில் அரிசி விலை இறங்கிவருவதாக மக்கள் சபையில் உதவி உணவு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டில் உணவுப் பொருள் விலை ஏறியது உண்மைதான் என்றும், ஆனால் இதர மாநிலங்களோடு ஒப்பிடும்போது தென்னாட்டில் விலையேற்றம் குறைவானதுதான் என்றும், கடைசி ரக அரிசி 15 முதல் 20 சதவிகிதம் வரை மட்டுமே உயர்ந்தது என்றும், அந்த மந்திரி விவரம் தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டில், விலை ஏற்றத்தைத் தடுக்க சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகவே விலை இறங்கிவருவதாகவும் அவர் கூறினாராம்.

ஏதுமிலார்போல் இனியுமேன் வாட வேண்டும்?

குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறுதது ஏன்?

இரண்டாம் திட்டத்தைத் தென்னாட்டவர் ஏன் ஆதரிக்க வேண்டும்?

" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னிந்தியாவிற்குரித்தான பொருளாதாரப் பங்கு அளிக்கப்படவில்லை என்றும், இந்நேர்மையற்ற முறையை எதிர்க்கும் தம்முடைய கண்டனத்தை, நாட்டு வளர்ச்சிக்குழுக் கூட்ட நடவடிக்கைகளில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும், மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா தெரிவித்திருக்கிறார். அவருடைய வீர உணர்ச்சியை நாம் மிகவும் போற்றிப் பாராட்டுகின்றோம்.

" திரு. அனுமந்தையா, சென்ற செவ்வாய்க்கிழமை அன்று நடந்த நாட்டு வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், நேர்மையற்ற அரசாங்கப் போக்கிற்குச் சில எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார். முக்கியமாக, எஃகுத் தொழிற்சாலைகளும், ஏனைய பெருந்தொழில்களும் வட இந்தியாவிலேயே நிறுவப்பட்டு வருவதை அவர் சுட்டிக் காட்டியபோது, தலைமை அமைச்சர் நேருவே குறுக்கிட்டு, அதற்கொரு காரணத்தைக் கூறியிருக்கிறார்:—' எஃகுத் தொழிற்சாலைகளுக்கு இன்றியமையாத தேவைகளான மூலப் பொருள்கள் தென்னிந்தியாவில் கிடைக்கவில்லை,' என்று திரு. நேரு கூறினர். 'அப்படியானல் மற்ற தொழில்களை தென்னிந்தியாவில் நிறுவியிருக்கலாமே,' என்று அனுமந்தையா கேட்ட கேள்விக்கு, நேருவோ அல்லது இதர வடஇந்திய அரசாங்கப் பிரதிநிதிகளோ பதிலளிக்க முடியாமல் மவுனநிலையை மேற்கொண்டனர்.

" திரு. அனுமந்தையாவின் மற்றொரு கேள்விக்கும் மறுமொழி அளிக்க யாராலும் முடியவில்லை. தென்னிந்தியாவில் இரயில்வே வளர்ச்சிக்குத் தேவைப்படும் பொருள் ஏன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை ' என்பதே அக்கேள்வியாகும்.

" இது மட்டுமல்லாமல், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த ஒரு சிறு புதிய இரயில்வேக் கிளை அமைப்பும், இரண்டாவது திட்டத்தில் இடம் பெருமல் மறைந்துவிட்டதை திரு. அனுமந்தையா குறிப்பிட்டபோது, அதற்கு யாதொரு மறுமொழியும் அளிக்கப்படவில்லை. மைசூரிலுள்ள சாமராச நகரையும், கோயம்புத்தூரையும் இணைப்பதற்கு ஒரு கிளை இரயில்வே அமைக்க வேண்டும் என்ற முதல் ஐந்தாண்டுத் திட்ட ஏற்பாட்டைத் திட்டக் குழுவினர் கைவிட்டது ஒரு குற்றச்சாட்டென்றே கூறலாம்.

" இத்தகைய குறைபாடுகளை, பொறுப்பு வாய்ந்த ஒரு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டியபோது, அவற்றை நீக்குவதற்கு நாட்டு வளர்ச்சிக் குழுவினர் ஏதாவது முயற்சி செய்திருக்க வேண்டும். ஆனல், அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஏன்? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து நடத்தும் ஆலோசனைகள், பேச்சுக்கள், விவாதங்கள் எல்லாம நிர்வாக நடைமுறைச் சடங்குகளேயொழிய, அவற்றைப் பின்பற்றி எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை என்று அரசினர் கருதுவதே இதற்குக் காரணம்.

" ஆனல், திரு. அனுமந்தையாவிற்கு இச்செயலற்ற சடங்குக் கூட்ட நடவடிக்கைகள் மகிழ்ச்சியளிக்கவில்லை. ஆகையால் அடுத்த நாள் கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரிக்கும் தீர்மானத்திலிருந்து தம்மை விலக்கிக்கொண்டார்.

திட்டத்தை வெற்றியுடன் செயல்படுத்துவதற்கு இந்திய மக்கள் முழு ஆதரவையும் தரவேண்டும் என்பதே இத்தீர்மானமாகும்.

" வட இந்திய மக்கள் இத்தீர்மானத்தை ஆதரிப்பார்கள் என்பது திண்ணம். ஆனல் தென்னிந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் புறம்பான தன்மையில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தென்னிந்திய மக்கள் ஏன் ஆதரிக்க வேண்டும்? இக்கருத்தை நன்கு வற்புறுத்தித் தம்முடைய கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டிய முறையில் தெரிவித்த முதலமைச்சர் திரு. அனுமந்தையாவிற்குத் தென்னுடு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

—6-5-56 'தமிழ் நாடு' இதழ் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பகுதியே மேலே தரப்பட்டிருப்பதாகும்.

கதர் உற்பத்திக்கு உதவ

மேலும் ரூ. 15 லட்சம்

டெல்லியின் தாராள மானியம்

புதுடில்லி, மே 7—

கதர் உற்பத்தி நிலையங்கள் மேலும் கதர் உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் அவற்றிற்கு உதவுவதற்காக, அகில இந்திய கதர்—கிராமத் தொழில் போர்டாருக்கு டெல்லிசர்க்கார் ரூ.15இலட்சம் மானியமாகத் தந்திருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

ஓநாய், கழுதைப் புலிகளுக்கு

குழந்தைகள் பலி

இலட்சுமணபுரி, மே 7—

சென்ற நான்கு திங்களில், இங்கு 40 குழந்தைகளை ஓநாய்களும், கழுதைப் புலிகளும் தூக்கிச் சென்றுவிட்டதாகச் செய்திகள் கிடைத்திருக்கிறது.

சென்ற 4 நாட்களிலும் 10 மகவுகள் காணமற் போயினவாம்.

திருமணம் பற்றி ஆச்சாரியா பாவே

திருப்பதி, மே 6—

" மனிதனின் தன்மை நிதானப்படுவதற்குத் திருமணம் ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறது. திருமணம் மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பமென்றாலும், அது அதிக முயற்சியையும், அதிக பொறுப்பையும், ஞாபக மூட்டும் சக்தியையும் தருகிறது" என்று, ஆச்சார்ய விநோபாபாவே ஓர் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

தேனீ வளர்ப்புக்கு நிதி அனுமதி

பெங்களூர், மே 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு கிராமக் கைத் தொழில்களுக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ..14 கோடியில் தேனீ வளர்ப்புத் தொழிலுக்கு ரூ 1,45,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறதெனத் தெரியவருகிறது.

பாலக்காடு மே தின விழ[...]

துணைப் பொதுச்செயலாளர்

மாநில மாநாட்டுக்கு 101 ரூபாய் நன்கொ[...]

பாலக்காடு தி. மு. கழக ஆதரவில், கோட்டை மைதானத்தில், 6—5—56 மாலை 6-30 மணிக்கு, மே தின விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்களும் தொழிலாளர்களும் திரண்டிருந்தனர்.

கோவை நகர தி. மு. கழகச் செயலாளர் எஸ். ஏ. ராசமாணிக்கம் தலைமை வகித்தார்.

பாலக்காடு தி. மு. கழகச் செயலாளர் கிருஷ்ணன் கூட்டத் தலைவரையும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களையும் வரவேற்றுப் பேசிய பின் தலைவர் தமது முன்னுரையில், கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், மே தின விழா முக்கியத்துவத்தையும். பாட்டாளி மக்களின் நல்வாழ்வுக்காக தி மு கழகம் கொண்டுள்ள வேலைத் திட்டங்களையும் உண்மையான பொதுவுடைமைக் கொள்கை திராவிடத்தில் வளர்ச்சி பெறவும், அக்கொள்கை வெற்றியுறவும், கொண்டுள்ள உறுதியினையும், திராவிடத்தின் அரசியல் நடவடிக்கைகளில் நாளுக்கொரு கொள்கையும், பேச்சும் பேசாது அரசியல் விவேகத்துடன் பணியாற்றி வருவதில் தி. மு. கழகம்தான் முன்னிற்கிறது என்பதையும் தற்கால அரசியல் நிலையையும், மாநில மாநாட்டில் எடுக்க இருக்கும் முடிவுகள் குறித்தும், திராவிட நாட்டுத் தனி அரசு அமைப்பில் சேர மக்களுக்குள்ள கடமையைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர்.

கூட்ட முடிவில், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 101 துணைப் பொதுச்செயலாளரிடம் அளிக்கப்பட்டது. அதனைப் பெற்றுக்கொண்டு தி. மு. [...] தலைமை நிலையச் சார்பில் [...] காடு கிளைக்கு நன்றி தெ[...]தார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிவுற்றது.

புதுவை:

6—5—56 இரவு 7 மணியளவில், புதுவைச் செஞ்சிச் சாலைத் திடலில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், புதுவை தி. மு க. வட்டக் குழுச் சார்பில் மே விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் இருபதினாயிரத்துக்கும் அதிகமாக மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்ததும், பெண் மக்கள் ஏராளமாக வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. தலைவர் தம் முன்னுரையில், கூட்டத்திற்கு இடையூறு செய்யும் வகையில் அனுமதி தர மறுத்த மேயரின் போக்கைக் கண்டித்துப் பேசினர்.

பின்னர், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் பேசிய பின், தோழர் மு. கருணநிதி உணர்ச்சி மிக்கதோர் சொற்பொழிவாற்றினர். கடைசிவரை மக்கள் ஆர்வத்துடன் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆரணி:

(பொன்னேரி வட்டம்)

6—5—56 இரவு 7 மணியளவில், ஆரணி பிள்ளையார் கோயில் முன்பு தி. மு. கழகச் சார்பில் மே விழாப் பொதுக்கூட்டம் திருவள்ளூர் நகரசபை உறுப்பினர் தோழர் டி. ஆர். வரதன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

தோழர் க. நெடுமாறன் இயக்கப் பண்பாடினர். தோழர்கள் சா. ஏசுபாதம், சி. ஆர். பாலசுந்தரம், கோ. வெற்றிவீரன் ஆகியோர் பேசிய பின்னர் இறுதியாக தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், இன்றைய சமுதாயத்தின் இழிநிலை குறித்தும், பழைமையின் பிடியிலிருந்து மக்கள் மீள வேண்டியதன் அவசியம் பற்றியும், கைத்தறி நெசவாளரின் ஆதரவற்ற நிலைகுறித்தும் விளக்கவுரையாற்றினர். தோழர் பா. சு. மணி நன்றி கவின்றார்.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—7/56

பொதுத் தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொண்டு போட்டியிட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து, மாநில மாநாட்டிற்கு வருகை தருவோரின் பொதுவான கருத்தை அறியும் வாக்கெடுப்பு முறை, 19—5—56 சனியன்று காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் நடைபெறும். நுழைவுச் சீட்டு உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமைச் சீட்டு தரப்படும்.

தி. மு. கழகம்
பொதுத் தேர்தலில் போட்டியிட

வேண்டும்	
வேண்டாம்	

இப்படி அமையும் சீட்டில் அவரவர் விருப்பத்திற்கிணங்க எதிரிலுள்ள கட்டத்தில் X அடையாளம் இட வேண்டும்.

மாநாட்டுப் பந்தலில் தனியே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வாக்குரிமைச் சீட்டைப் போட வேண்டும்.

'அறிவகம்,'
சென்னை—13
2-5-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

தேசீய மயமாகும் கோலார் தங்கவயல்

நஷ்டஈடு நிர்ணயத்தில் தகராறு

லண்டன், மே 7—

கோலார் தங்க வயல்கள் தேசீய மயமாக்கப்பட்டால், சுரங்கங்களின் சொந்தக்காரர்களான பிரிட்டிஷ் கம்பெனியார், இந்திய அரசினரிடமிருந்து நஷ்டஈடுத் தொகையாக ரூ. 6 கோடி முதல் 8 கோடிவரை கோருவதாக செய்திகள் அறிவிக்கின்றன. மைசூர் அரசியலார் ரூ 83 இலட்சத்தை நஷ்ட ஈடுத் தொகையாகத் தர முடிவுகட்டியிருப்பது மிகக் குறைவு எனவும் கருதப்படுகிறதாம்.

திருமணம்

ஒக்கரைத் தோழர் பி. நல்லையா—தோழியர் செல்லம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

****

13-5-56

மாநில மாநாட்டு விளம்பர நாள்

தி. மு. கழகத்தின் நகரக் கிளைகளும், சிற்றூர்—பேரூர்க் கிளைகளும் 13—5—56 ஞாயிற்றுக் கிழமையை மாநில மாநாட்டு விளம்பர நாளாகக்கோள்ளக் கேட்டுக்கோள்கிறோம்.

கழகத் தோழர்கள் ஆங்காங்கு, நடந்தோ அல்லது சைக்கிளிலோ அணிவகுத்துச் சென்று, தெருத் தெருவாகச் சுற்றி, ஒலி எழுப்புக் குழாய்கள் (Megaphone) மூலமும், ஒலி பெருக்கி வாயிலாகவும், திருச்சியில் மே 17, 18, 19, 20 ஆகிய நான்குநாட்களில் மாநில மாநாடு நடைபெறப்போவது பற்றியும், அதன் சிறப்பியல்புகள் குறித்தும், விளம்பர முழக்கம் செய்யும்படிக் கேட்டுக்கோள்ளப்படுகிறார்கள்.

அணிவகுத்துச் செல்லும்போது விளம்பரத் தட்டிகள் ஏந்திக் கோண்டு, இலட்சிய முழக்கமிட வேண்டும். ஆங்காங்கு குறிப்பிட்ட இடங்களில் நின்று மாநில மாநாடு பற்றிய விளம்பர முழக்கம் செய்யவேண்டும்.

எல்லா கிளைக் கழகச் செயலாளர்களும் மேற்கண்ட முறைகளில் முயற்சி எடுக்கக் கேட்டுக்கோள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. கழகத் தலைமை நிலையம்.

****

தீரமிகு பரம்பரை நாம்; தெளிந்தோமன்றோ?

...னிஸ்டுகள் செயல் தேச ...ரோதமானவை; கலகமூட்டுபவை'

...ந்துழைப்பை மறுத்து தேசீயத் ...ழிற் சங்கத் தலைவர் கருத்து

சூரத், மே 8—

கம்யூனிஸ்டுகளிடத்தில் தொழிலாளர்கள் உறவு கோண் ...வதற்கு, அவர்களுடைய ஒத்துழைப்பைத் தொழிலாளர்கள் ...றுவதற்கு இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரசின் புதிய தலைவ ...ரான எஸ். ஆர். வாசவதா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளின், கடந்த கால நடவடிக்கைகள் தேச விரோதமானவையாயும், கலக மூட்டுவனவாயும் இருந்திருக்கின்றன என்று வாசவதா குற்றம் சாட்டியிருக்கிறார்.

பத்திரிகையாளரிடம் பேசுகையில், கம்யூனிஸ்டுகள், தங்களது அகில இந்திய தொழிசங்கக் காங்கிரஸ், தேசீயத் தொழிற் சங்கக் காங்கிரசுடன் ஒரு பொதுவான வேலைத் திட்டத்தின்கீழ் ஒன்று பட்டு வேலை செய்யத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்ததைக் குறிப்பிட்டுக் கூறியதாவது :—

"இந்தியத் தொழிலாளர்கள் தங்களுடன் நேசம் கொள்ள வேண்டுமென கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கும் முன்பாக, திட்டமான வகையில், தங்களின் நடவடிக்கைகளுக்கு மேலும் நல்ல திருபணங்கள் கூட்டியாக வேண்டும்.

"கம்யூனிஸ்டுகள், தொழிலாளரிடை ஒற்றுமை வேண்டுமெனக் குரல் எழுப்புகின்றனர்; ஆனால், இந்தியத் தொழிலாளர்கள், கம்யூனிஸ்டு கட்சியுடன் கூட்டுச் சேருமுன், ஒருமுறைக்கு இரு முறையாக, சிந்தித்துப் பார்ப்பார்கள்—யோசித்துப் பார்ப்பார்கள்; ஏனெனில், கம்யூனிஸ்டுகளின் கடந்த கால நடவடிக்கைகள், தேச விரோதமானவையாகவும், கலக மூட்டுவனவாயும் இருந்து வந்திருக்கின்றன."

ஓய்வு பெற்ற ஊழியர்கள்

இரயில்வேயில் மீண்டும் வேலை பெறுவர்

நியமனம் குறித்து அழகேசன் விளக்கம்

புதுடில்லி, மே 8—

இரயில்வே இலாகாவின் இரண்டாவது திட்டத் தேவைகளைச் சமாளிப்பதற்காக, இரயில்வேக்களில் ஜெஜட் பதிவு பெற்றதும், பெருந்தமான பதவிகளுக்கு ஓய்வு பெற்றுள்ள முன்னாள் ஊழியர்களும் நியமிக்கப்படுவார்கள் என்றும், இத்தனை பேர்தான் நியமிக்கப் படுவர் என்ற தொகை நிர்ணயம் இல்லை என்றும், தேவைக்கேற்ப அவ்வப்போது நியமனங்கள் செய்யப்படும் என்றும், இப்படி நியமனம் செய்யப்படுவதற்கு குறிப்பிட்ட முறை எதும் கிடையாதெனவும், தகுதியானவர்களை பொது நிர்வாகிகள் அழைப்பர் என்றும், அவர்கள் ஒப்புதல் அளித்தால் நியமனம் பெறுவர் என்றும், இப்படி நியமனம் பெறுவோர் அவர் இறுதியாக வாங்கிய சம்பளமோ அல்லது குறிப்பிட்ட பதவிக்குரிய சம்பளமோ தரப்படும் என்றும், இதர வேலை நிலைகள் எல்லாம் தற்காலிக ஊழியருக்கு உள்ள படிதான் என்றும் மக்கள் சபையில் இரயில்வே இலாகா துணை அமைச்சர் ஓ. வி. அழகேசன் தெரிவித்திருக்கிறார்.

கைத்தறியாளருக்கு உதவ!

சென்னை, மே 8—

கூட்டுறவு இயக்கத்தின் ஆரவணைப்புக்கு உட்படாத, கைத்தறி நெசவாளருக்கு உதவி செய்வது சம்மந்தமாக, சர்க்கார் ஒரு பூ: வாக்கத் திட்டத்தை பாசிலனை செய்து வருவதாக அதிகார வட்டாரத்தினர் தகவலளித்திருக்கின்றனர்.

★★★★★★★★-★-★★★★★★★★

மாநில மாநாடு

அழகிரி உணவு விடுதி

மாநில மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு மிகவும் வசதியாகவும், நேர்த்தியாகவும் உணவு அளிக்கும் ஏற்பாட்டினை ராபி குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

மாநாட்டுப் பந்தலையடுத்து இந்த உணவு விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டிற்கு வருகைதரும் பொதுமக்கள் அழகிரி உணவு விடுதியில் ருசியான உணவினை மேற்கொள்ளலாம்.

★★★★★★★★-★-★★★★★★★★

கடலங்குடி தி. மு. கழக 2-வது ஆண்டு விழா

10—5—56 மாலை 5 மணிக்கு, கே. ஆர். பாலகிருஷ்ணன் தலைமையில் மேற்படி ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் என். கிட்டப்பா, கே. எஸ் சௌந்தரராசன், எஸ். ஆர். இராதா பேசுவர்.

¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤

மாநில மாநாடு :

தலைமை நிலையம்—முகவரி மாற்றம்

மாநில மாநாட்டினையொட்டி தி. மு. கழகத் தலைமை நிலையம் [தற்காலிகமாக] 6—5—56 முதல் 27—5—56 வரை கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

முகவரி :

தி. மு. கழகத் தலைமை நிலையம்,
'வள்ளுவர் நகர்',
தி.மு.க. மாநில மாநாடு அஞ்சல்
திருச்சி

போன் எண் :

மாநாட்டுப் பந்தல் : 666
தலைமை நிலையம் : 676

—தலைமை நிலையம்

¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤

சிதம்பரம் வட்ட

கிளைக் கழகத் தோழர்கட்கு :

11—5—56 வெள்ளி மாலை 5 மணியளவில் சிதம்பரம் செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு தி. மு. க. வட்ட அலுவலகத்தில், நகர கழகச் செயலாளர் இரா. சக்ரவர்த்தி தலைமையில், வட்ட செயற்குழு அவசரக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டிற்கு விளம்பரம் செய்தல்; மாநாட்டிற்கு கழகத் தோழர்கள் செல்லுதல்; தீர்மானங்களைப் பற்றி முடிவெடுத்தல் ஆகியவை ஆய்வுக்குவரும். கிளைக் கழகப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது வருகைதர வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, சிதம்பரம் வட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் பொன். சொக்கலிங்கம் அறிவிக்கிறார்.

திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளில் உள்ள கோவில்கள்

செலவு தொகை தர கேரள சர்க்கார் சம்மதம்

திருவனந்தபுரம், மே 8—

சென்னையுடன் இணைக்கப்படும் தமிழ் தாலுகாக்களில் உள்ள கோவில்களின் செலவுகளுக்காக ஆண்டுதோறும் ரூ. 13,50,000 - தருவதென உறுதி கூறப்பட்டிருக்கிறதாம்.

திருவாங்கூர் பகுதியில் மொத்தம் 1,600 கோவில்கள் உள்ளன வென்றும், சென்னையுடன் இணைக்கப்படும் பகுதியில் 200 கோவில்கள் இருக்குமெனவும் கூறப்படுகிறது.

கோவில் நிலங்களை சர்க்கார் ஆர்ஜிதம் செய்ததற்கு நஷ்டஈடாக, திருவாங்கூர் தேவஸ்வம் போர்டாருக்கு திரு—கொச்சி சர்க்கார் ரூ. 51 லட்சம் கொடுத்து வந்திருக்கிறது.

மாநில புது அமைப்புத் திட்டத்தினால் சென்னையுடன் இணையும் பகுதிகளில் உள்ள கோவில்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 4,50,000 தந்தால் போதுமென்று மாநில புது அமைப்புக் குழு கூறியிருந்த யோசனை, இறுதிப் பரிசீலனைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

குடும்பக் கட்டுப்பாடு

திட்டத்திற்கு ரூ. 4 கோடி

புதுடில்லி, மே 7—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்ட வேலைக்காக ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் 1,800 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களையும், நகரங்களில் 800 நிலையங்களையும் துவக்கத் திட்டமிட்டிருக்கிறது இதற்குத் தேவையான பயிற்சியாளர்களை தயாரிப்பதற்காக, 'குடும்பக் கட்டுப்பாடு ஆய்வுப் பயிர்சிக் கழகம்' ஒன்று திறவப் படும்"

என்று, துணை சுகாதார அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன், மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இராணுவ அதிகாரிகள் வேறு வேலைகளைத் தேடுகின்றனராம்!

காரணம் குறித்து தியாகி விளக்கம்

புதுடில்லி, மே 8—

கணக்கற்ற இராணுவ அதிகாரிகள், வேறு வேலை தேடுகின்றனராம்!

இது குறித்து சர்க்கார் கவலை கொள்கிறதாம்.

இந்தத் தகவலை மந்திரி தியாகி தெரிவித்திருக்கிறார்.

அதிகாரிகள் வேறு வேலைகளுக்கு மனுச் செய்வதற்கு அதிருப்தியோ, குறைபாடோ காரணம் அல்லவென்றும், குடும்பத்தோடு வாழுவது போன்ற சில அடிப்படை வசதிகள் இல்லாமையே இதற்குக் காரணம் என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

மே 10 : திருநாகேச்சுரம்
11 : திருப்பாலக்குடி
12 : மன்னார்குடி
13 : கும்பகோணம்

அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க பிரான்ஸ் தொடுத்துள்ள யுத்தம்!

விமானங்களிலிருந்து குண்டுமழை பொழிகின்றனர்

48 மணி நேரத்தில் நூற்றுக்கணக்கானோர் பலி

அல்ஜியர்ஸ், மே 6—

அல்ஜீரியாவின் விடுதலைக்காக இப்போது நடைபெற்றுவரும் பயங்கரமான கிளர்ச்சிகளில், இப்போது தீவிரமான பங்கேற்பவர்களாக மாணவர்கள் இருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

சுமார் 2,000 பேர்களடங்கிய கூட்டம் ஒன்றின்மீது—பெரும்பாலும் மாணவர்கள் அடங்கியது—இராணுவத்தினர் விமானங்களிலிருந்துகொண்டு கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வெடித்திருக்கின்றனர்.

அல்ஜீரியாவின் மற்றொரு பகுதியில் இரத்த வெறிகொண்ட பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் விமானங்களிலிருந்துகொண்டு குண்டுகளை வீசி, தீவிரவாதிகளாயிருக்கும் அல்ஜீரிய மக்களில் 150 பேர்களைக் கடந்த 48 மணி நேரத்தில் கொன்று குவித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பழிக்குப் பழிதீர்க்க நினைத்து விடுதலை தாகத்தால் உந்தப்படும் அல்ஜீரிய தீவிரவாதிகள் சுமார் 40 பிரெஞ்சு இராணுவ வீரர்களைக் கொன்றிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

அல்ஜீரியாவின் விடுதலைக்காக வீரத்தோடு போரிடும் தீவிரவாதிகள்மீது, பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகள் ஒரு பெரும் யுத்தமே தொடுத்திருக்கின்றனர் என்று பார்வையாளர்கள் கருதுகின்றனராம்.

ஒரு யோசனை!

சூரத், மே 8—

தற்காப்பு இலாகா நிறுவனங்களில், ஊழியர்கள் உபரியாக இருக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண, 55 வயதானதும் கட்டாய ஓய்வு பெறச்செய்வதே சரியான பரிகாரம் ஆகும் என்று தேசியத் தொழிற்சங்கக் கவுன்சில் யோசனை ஒன்று தெரிவித்துள்ளதாம்.

வாழ்வோரை விரட்டிய விஷ நாகங்கள்

ஐதராபாத், மே 8—

அவுரங்கபாத்திற்கு அருகிலுள்ள நயாசோழ கிராமத்திலுள்ள பாம்புகள், அப்பகுதியில் வாழ்வோரை விரட்டி வெளியேற்றியுள்ளனவாம் விஷ நாகங்களின் ஆபத்திற்கு அஞ்சி வெளியேறிய கிராம மக்கள் 'விட்டல் நகர்' என்ற புதிய கிராமத்தை அமைத்து வருகிறார்களாம். தற்போது நயாசோழ கிராமத்தில் பாம்புகளும், விடப் பிராணிகளும் தான் இருக்கின்றனவாம். பாம்புகளை ஒழித்துத் தருமாறு, அப்பகுதியில் வாழ்வோர் அதிகாரிகளை கேட்டுக் கொண்டுள்ளனராம்.

பீகார் மந்திரி சபைக்கு சீட்டு?

சட்டசபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

பாட்னா, மே 8—

பீகார் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை ம. சோ. கட்சி உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் கொண்டுவந்திருக்கிறார் வரும் 15-ந் தேதியன்று இது விவாதிக்கப்படுமாம்.

கிழவிகளைக் கேட்டு......

(முதல் பக்கத் தொடர்ச்சி)

யினர் முயன்றபொழுதும், 'அந்தத் தடையினால் இந்து சமூகமே நிர்மூலமாகிவிடும்' என்று தான், வைதீகர்கள் கூச்சலிட்டனர். இதே மனோபாவத்தைத் தான், விதவை மறுமணச் சட்டம் விவாதிக்கப்பட்ட நேரத்திலும், இந்து வைதீகர்கள் மேற்கொண்டனர்.

"இந்த சட்ட சீர்திருத்தத்திற்கான மக்கள் ஒப்புதலை சென்ற பொதுத்தேர்தலின்போது காங்கிரஸ் பெற்றதற்குப் பின்னரும், மக்கள் தந்துள்ள அதிகாரத்தை அலட்சியப்படுத்தவும், உதறித் தள்ளி நடக்கவும் காங்கிரஸ் உறுப்பினர் முன்வருவது, ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முற்றும் புறம்பானதாகும்.

"நாட்டின் சில பகுதிகளில் 'தாயபாக' முறையையும், வேறு சில பகுதிகளில் 'மீதாட்சா' முறையையும், சொத்துரிமை பெறுவதில் மேற்கொண்டு வருவதற்கும், எந்த விதி நியாயமும் கிடையாது. 'மீதாட்சர' முறையை ஒழித்துவிட வேண்டும் என, இந்து சட்டத் திருத்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அப்படி இருந்தும், அதை ஒழிக்க சட்ட மந்திரி தயக்கம் எதற்குக் காட்டவேண்டும்? 'மீதாட்சா' முறை ஒழிக்கப்பட்டால்தான், மகளும், மகனும், தந்தையின் சொத்தில் சமமாகப் பங்கு பெறுவது சாத்தியமாகும்."

விலை ஏற்றத்தைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை

நியாய விலையில் அரிசி கிடைக்க ஏற்பாடு

சென்னை, மே 7—

ஆள் ஒன்றுக்கு இரண்டு படி வீதம், படி ஒன்றுக்கு விற்பனை வரி உட்பட $11\frac{1}{2}$ அணா விலையில் அரிசி கிடைப்பதற்கு சென்னை சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

டி. யு. சி. எஸ். மூலம் இந்த அரிசி விநியோகம் நடைபெறும் என்றும், ஏறுமுகத்தில் உள்ள அரிசி விலையை இறக்குவதற்காகவே இந்த ஏற்பாடு என்றும் தெரியவருகிறது.

எட்டு திங்களுக்குள்!

புதுடில்லி, மே 8—

இந்திய சர்க்கார் அடுத்த 6 அல்லது 8 திங்களுக்குள் 5 இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளது என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

திராவிடரே! திருச்சியினில் திரளுவீர் நாடுமீட்க